## முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | **OS** | **219** | **of** | **2024** |

**2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 23–ம் நாளான இன்று**

வாதி/பிரதிாவதி தரப்பில் 1–வது சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.A.Syed Mohamed, Gr–I BC, என்பவரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கௌசிக் |
| தந்தை பெயர் | குமரவேல் |
| கிராமம் | |
| தொழில் | வழக்கறிஞர் |
| வயது | 28 |

நாள் 23.07. 2026– CW.1

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் நான் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டேன். தாவா சொத்தை இருதரப்பினர் உரிய அறிவிப்பு கொடுத்து நான் அவர்களை வரவைத்து சர்வேயர் வி ஏ ஓ ஆகியோர்களை

அழைத்து அவர்கள் முன்னிலயில் நான் பார்வையிட்டேன். என்னுடைய ஆய்வை முடித்து விட்டு என்னுடைய அறிக்கை மற்றும் வரைபடம் ஒப்படைத்து இருக்கிறேன். இரு தரப்பிலும் உரிய குறிப்பாணை வழங்கினார்கள். அவர்கள் கொடுத்த அறிவுறுத்தல்களை நான் பின்பற்றினேன். **மேற்படி அறிக்கை c1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு கொடுக்கப்பட்ட வாரண்டு படி தாவா சொத்தை மூல ஆவணங்கள் வைத்து அளப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது என்றால் ஆமாம். இதற்கு காரணம் தாவா சொத்தின் அமைப்பு மற்றும் அடையாளத்தை கண்டுபிடிப்பதற்கு என்றால் சரிதான். மூல பத்திரத்துடன் ஆய்வு செய்து பார்த்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். சி ஆர் பி எண் 538/2025 பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமனறத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி உத்தரவில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமனறம் நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் யாதொரு அறிக்கையும் ஆவணங்கள் அடிப்படையில் கருத்து இட வேண்டாம் என்று உத்தரவில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஆமாம். என்னுடைய அறிக்கையில் 3 வது பக்கத்தில் ஆவணங்களை ஒப்பீடு செய்து என்று சொல்லியுள்ள வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்றால் இரு தரப்பு ஆவணங்களை ஒப்பீடு செய்தேன். என்னுடைய அறிக்கையில் மேற்சொன்ன ஆவணங்களை ஆராய்ந்து

பார்த்ததில் வாதியின் மூல ஆவணத்தின் உரிமையாளர் ஆன திரு. எச் எம் அப்துல் காதர் அவர்கள் கிரையம் பெற்ற நிலமும், பிரதிவாதியின் மூல ஆவணத்தின் உரிமையாளாரான திருமதி. லலிதாபாய் அவர்கள் கிரையம் பெற்ற நிலமும் வெவ்வேறானவை என்பது ஆய்வில் தெரிகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் முடிவு எடுத்தேன் என்றால் சொத்து விவரம் மாறியுள்ளது. எப்படி கண்டுபிடித்தேன் என்றால் சொத்து விவரம் ஆவணத்தில் பார்த்த போது வாதி கொடுத்த மூல ஆவணத்திற்கும் பிரதிவாதி கொடுத்த மூல ஆவணத்திற்கு வித்தியாசம் இருந்தது. ஆவண எண் 2279/1936 அதில் உள்ள சொத்து விவரத்தையும், ஆவண எண் 6495/1942 உள்ள சொத்து விவரத்தையும் பார்த்ததில் வெவ்வேறாக உள்ளது. இந்த இரண்டு ஆவணத்தின் அடிப்படையில் எப்படி சொல்கிறேன் என்றால் நான்கு பக்கங்களையும் பார்த்தேன். ஜக்குபந்தி மாறுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஆவணங்களின் ஆவண எண் 2279/1936 சொத்து விவரம் நான்கு பக்கங்கள் சரியாக உள்ளதா என்றால் ஆமாம். கிழக்கில் என்னுடைய காலி மனை என்று சொல்லியிருப்பது கிருஷ்ணசாமி முதலியாரின் காலி மனை என்று உள்ளது. உண்மையிலேயே அங்கு இருப்பது யாருடைய காலி மனை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்கு நடுத்தெரு என்று உள்ளது. உண்மையிலேயே அங்கு இருப்பது என்ன தெரு அங்கு உள்ளது எனக்கு தெரியாது என்றால்

சரிதான். ஆவணத்தில் நடுத்தெரு என்று உள்ளது என்றால் ஆமாம். வடக்கில் வேணு கோபால் காலி மனை என்று உள்ளது. நேரில் அங்கு இருப்பது வேணுகோபால் காலி மனை என்று இருப்பது எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தின் அடிப்படையில் சொன்னேன். தெற்கில் ஆற்காடு ரோடு என்று உள்ளது. அங்கு ஆற்காடு ரோடு இருந்ததா என்றால் இல்லை. தற்சமயம் வேலூர் ரோடு என்று பெயர் பலகை பார்த்தேன். இந்த சொத்திற்கு இரண்டு ரோடுகள் கிடையாது என்றால் சரிதான். ஒரு பக்கம் தெருவும், ஒரு பக்கம் பிரதான சாலையும் உள்ளது. நீதிமன்ற அறிக்கையில் 5 வது பக்கத்தில் கிழக்கில் குள்ளப்ப நாயக்கர் தெரு என்று உள்ளது. நான் பார்வையிட்ட போது கிழக்கில் தெரு உள்ளதா என்றால் இருந்தது. மேற்கில் சர்வே எண் 15 மற்றும் 16 சி ஜி கிருஷ்ணசாமி வகையறாவுக்கு சொந்தமான பட்டா நிலம் என்று சொல்லியிருக்கிறேன். ஆவணத்தை பார்த்து சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். வடக்கில் வேணுகோபால் முதலியார் காலி மனை என்று சொல்லியிருக்கிறேன். நான் பாாவையிட்ட போது காலி மனை இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் அது யாருடையது என்று தெரியாது. தெற்கில் தெய்வானை அம்மாள் வீடு என்று உள்ளது. அதுவும் ஆவணத்தை பார்த்து எழுதியிருக்கிறேன். தெற்கில் ஒரு வீடு இருந்தது. இதன் மத்தியில் 18 ½ நிலம் என்று உள்ளது. உண்மையிலேயே எவ்வளவு நிலம் என்று சர்வேயர் வைத்து அளந்தோமா என்றால் அளந்தோம். அவர் இன்னும் வரைபடம் கொடுக்கவில்லை.

என்னிடம் அவர் அறிக்கை கொடுக்கவில்லை. நானும் கேட்கவில்லை. நீதிமன்றம் தீர்மாணிக்க வேண்டிய கருப்பொருளை நான் என்னுடைய அறிக்கையில் முடிவு செய்து சொல்லியிருப்பது எனக்கு கொடுக்கப்ட்ட அறிவுறுத்தலுக்கு அதிகபடியாக சமர்பித்திருக்கிறேன் என்றும், அதனால் என்னுடைய அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. அது போல் நான் செயல்பட வில்லை.

**3 மற்றும் 4 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

என்னுடைய அறிக்கையில் புகைப்படங்கள் ஒப்படைத்து இருக்கிறேன் என்றால் ஆமாம். வாரண்டில் சொல்லப்பட்டதா என்றால் இல்லை. புகைப்படம் யாருடைய அறிவுறுத்தலின் பேரில் எடுத்தேன் என்றால் நான் பார்த்தற்காக எடுக்கப்பட்டது. நான் குறுந்தகடு அல்லது பென்டிரைவ் ஒப்படைத்து இருக்கிறேனா என்றால் இல்லை. என்னுடைய செல்போனில் எடுத்தேன். தேதி, மாதம், நாள் அதில் பதிவாகவில்லை என்றால் சரிதான். சாதாரண புகைப்படம். ஜிபி எஸ் என்று சொல்லியிருக்கிறேன். அப்படியென்றால் அட்சரேகை , தீர்க்கரேகை ஏன் காட்டப்படவில்லை என்றால் சாதாரண புகைப்படம் ஆகும். ஜி பி எஸ் என்று நான் சொல்வது தவறு என்றால் ஆமாம். என்னுடைய அறிக்கையில் பக்கம் 7 ல் இரண்டு சர்வே எண்கள் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் ஆமாம். சர்வே எண் 18 என்பது தாவா சொத்து கிடையாது என்றால் சொத்து விவரத்தில் உள்ளது அதை தான் போட்டேன். புல எண் 18 எதன் அடிப்படையில்

குறிப்பிடப்பட்டது என்றால் பிராதில் பார்த்து குறிப்பிட்டிருக்கிறேன். நான் சர்வேயரிடம் முதல் சர்வே எண் 13 எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்று கேட்டேனா என்றால் இல்லை. நான் பக்கம் 3 ல் என்னுடைய அறிக்கையில் மேற்படி நான்கு எல்லைக்குள் இரண்டு வீடுகள் இருப்பதாக பத்திரத்தில் கண்ட வாசகங்களை அப்படியே குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் ஆமாம். மனு சொத்தில் ஹாலோ பிளாக் சுவர் அமைத்து கட்டி முடிக்கப்படாமல் ஒரு கட்டிடம் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த வீடு வாதி கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள சொத்தா என்றால் ஆமாம். தற்போது அந்த இரண்டு வீடுகள் அங்கு உள்ளதா என்றால் இல்லை. நான் ஆய்வு செய்த பத்திரங்களில் மின்சார அலுவலகம் ஒரு பக்க ஜக்குபந்தியாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சர்வே எண் 13 எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்று சர்வேயரிடம் கேட்டேனா என்றால் இல்லை. சர்வேயர் கொடுத்த அடங்கலில் காலி மனை உள்ளது. அது சரியா என்றால் நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் தனியாக வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்தியன் வங்கி அடமான பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் பக்கம் 8 ல் இரண்டாவது பத்தியில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியா என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் எவ்வித கருத்துரையும் தெரிவிக்ககூடாது என்று உத்தரவிட்ட பிறகும் நான் தெரிவித்திருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

இந்தியன் பேங்க் அடமான பத்திரத்தில் உள்ள சொத்து விவரமும் நில அளவையர் கொடுத்த சொத்து விவரம் சரியாக இருப்பதாக பக்கம் 8 ல் 3வ து பத்தியில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். மூல ஆவணம் என்று நான் எதை எடுத்து கொள்கிறேன் என்றால் இருவரும் கொடுத்த ஆவணத்தை தான் எடுத்து கொடுத்தேன். 3 வது பக்கத்தில் வேணு கோபால் காலி மனை என்று உள்ளது. அது தற்சமயம் எவ்வாறு உருமாறி உள்ளது என்றால் அஜாய்சகாப் நிலம் என்று உள்ளது. அஜாய் சகாப் நிலமும் வேணுகோபால் நிலமும் ஒரே நிலம் என்று எதன் அடிப்படையில் முடிவு செய்தேன் என்றால் சொத்து விவரத்தை வைத்து முடிவு எடுத்தேன். 13/1 சர்வே நம்பருக்கு கிரைய ஆவணங்கள் என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்றால் நினைவில்லை. லஷ்மி நாராயணன் வகையறாவிடமிருந்து வாங்கி சொத்துக்கள் 4 ½ சென்ட் என்றால் தெரியாது. 4வது பக்கத்தில் லலிதாபாய் அம்மாளுக்கு சொந்தமானது என்று கிழக்கில் சொல்லியிருக்கிறேன். எதன் அடிப்படையில் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் சொன்னேன். அதை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண் இது தானா என்று ஊர்சிதம் செய்வதற்கு பிற கிரைய ஆவணங்களை அதாவது ஒப்பு நோக்க ஆவணங்கள் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. 13/1 ஏ சி என்பது தற்சமயம் 17 மற்றும் 18 சர்வே எண்ணாக பிரிந்து உள்ளதா சொல்கிறேன். அதற்கு இவ்வளவு விஸ்திரனம் என்று என் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால்

இல்லை. பழைய சர்வே எண் மட்டும் சொல்லியிருக்கிறேன். நகரளவு பட்டா என்னிடம் கொடுத்தார்கள். அதை வைத்து எழுதினேன். மேற்படி சர்வே எண் இந்த வழக்கில் உள்ள இடம் என்றால் ஆமாம். அது 3 மற்றும் 4 பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா என்றால் ஆமாம். பக்கம் 7 ல் கடைசி 3 வரிகளில் லஷ்மி நாராயணன், ராமசந்திரன், நரசிம்மன் ஆகியோரக்கு கூட்டு பட்டா என்று சொல்லியிருக்கிறேன். என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் இல்லை. பக்கம் 7 ல் ஆவணத்தில் உள்ளவாறு புலம் அமைந்தள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். ஆவணம் என்பது என்னிடம் கொடுக்கப்பட்ட 1936 ஆவணத்தை சொல்கிறேன். 36 மற்றும் 46 ஆவணங்களின் நான்கு எல்லைகள் நாளது வரை அப்படியே உள்ளது என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் தொடர்ச்சியாக உள்ள ஆணங்களின் அடிப்படையில் சொல்கிறேன். சர்வேயர் அறிக்கை என்னிடம் கொடுத்தார் என்றால் ஆமாம். தாவா சொத்தின் விஸ்திரனம் அளந்த போது 20 சென்ட் என்றால் நினைவில்லை. நான் என்னுடைய அறிக்கையில் 20 சென்ட் என்று சொல்லியிருக்கிறேன என்றால் பட்டாவில் 20 சென்ட் என்று உள்ளது. சர்வே எண் அறிக்கையில் 17 ½ சென்ட் மட்டுமே என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பக்கத்து நிலம் ஈபி சர்வே நம்பர் என்றால் சர்வே நம்பர் தெரியாது. பக்கத்தில் உள்ளது. வாத என்னிடம் அந்த பட்டாவை கொடுத்திருந்தார். நான் பட்டாவை நீதிமன்றத்தில்

ஒப்படைக்காமல் ஆ பதிவேட்டை ஒப்படைத்து இருக்கிறேன் என்றால் சரிதான். சர்வேயர் கொடுத்த அறிக்கையிலும் நான் நீதிமன்றத்தில் சமர்பித்த அறிக்கையிலும் முரண்பாடு உள்ளது என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் அளித்த பத்திரங்களில் அளவுகள் கூட குறைய உள்ளது என்றால் தெரியவில்லை. நகராட்சி வரி ரசீது எண் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த ரசீதை பார்த்தேனா என்றால் நினைவில்லை. நான் ஸ்தல ஆய்வு மேற்கொண்ட போது அளவுகள் மற்றும் இதர அளவுகள் குறிப்பு எழுதி கொண்டேனா என்றால் ஆமாம். வாதி எனக்கு கொடுத்த வரி ரசீதுகள் நெட்டேரி ரோடு என்று உள்ளது என்றால் ஆமாம். வரி ரசீதின் தெரு பெயர் போடவில்லை என்றால் சரிதான். வாதிகளிடம் வரி ரசீது மற்றும் வேறு ஆவணங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 13 என்பது பல உட்பிரிவுகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது உள்ள உட்பிரிவும் பிரதிவாதிகளின் ஆவணத்தில் உள்ள உட்பிரிவும் ஒரே மாதிரி உள்ளது என்றால் சரிதான். நான் வாதிக்கு ஆதரவாக உள்ள பத்திரங்களிலும், பிரதிவாதிகளின் உள்ள பத்திரங்களிலும் சரியாக கணக்ககிடாமல் எதன் அடிப்படையில் வெவ்வேறானவை சொல்லுகிறேன் என்றால் ஐக்குபந்தி வைத்த தான் சொல்கிறேன். நான் எந்த இடத்தையும் சரியாக அளக்கவில்லை என்றும், மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவை மீறியிருக்கிறேன என்றால் சரியல்ல.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.